**தலைப்பு – 185 – தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குஇலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,718 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 1,135 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சினது தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 583 மில்லியன் அல்லது தேறிய ஏற்பாட்டில் 34 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 209 | 184 | 25 | 12 |
| மூலதனம் | 1,509 | 951 | 558 | 37 |
| **மொத்தம்** | **1,718** | **1,135** | **583** | **34** |

### 2.2 முற்பணக் கணக்கு

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| --------- | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18501 | 3.00 | 1.58 | 0.50 | 0.97 | 7.00 | 4.94 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0419/0013/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 39 மில்லியன் ஆகும்.

## 2.4 பொது வைப்புக்கணக்கு

அமைச்சின் 2004 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6000/0000/00/0015/0187/0000 ஆம் இலக்க பொது வைப்புக்கணக்கின் மீதி ரூபா 39 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தியிலிருந்து 3.10 ஆம் பந்தி வரையான பந்திகளில் காட்டப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 185 – தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

### 3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினத்தலைப்பொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 24 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 கட்டுநிதிக் கணக்குகள்

2015 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருந்த கட்டநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39 மில்லியனாக இருந்தது. இந்த மீதி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டங்களில் 03 நிர்மாணங்களுக்குரிய மூன்று ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்கள் மற்றும் இடைக்காலக் கொடுப்பனவுகளாகும்.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

தேசத்திற்கு மகுடத்திற்காக பெறப்பட்டிருந்த ரூபா 39 மில்லியனுக்குரிய செயற்பாடுகளுக்காக தீர்க்கப்படாமல், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட

பூர்த்தியாக்கல் பெறுபேறு மற்றும் வருடாந்த செயற்பாடுகளுக்கான மூல நிதித் தேவைப்பாட்டு திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்துடன் பிரதான கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 523 மில்லியனாக இருந்ததுடன் அந்த பொறுப்புக்கள் வருடமொன்றிற்கு குறைவான காலப்பகுதிக்குரியனவாகும்.

(ஆ) பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டத்திற்காக கணனி மற்றும் ஏனைய உப பாகங்களை கொள்வனவு செய்வதற்காக 185-2-3-1-2502 கொண்ட செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டிறுதியில் எஞ்சிய ரூபா 189.8 மில்லியன் நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 206.99 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அந்த பொறுப்புக்களில் ரூபா 108.5 மில்லியன் 2015 யூன் 16 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 94(i) இன் பிரகாரம் நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்படக் கூடாதெனினும், 6 செலவின விடயங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பினை விஞ்சி ரூபா 17.6 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 122,315 தொகையான பொறுப்புக்கள், ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 செயலாற்றல்**

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 07 மாவட்டங்களில் 1,262 கணனி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டிருந்ததெனினும், 3 மாவட்டங்களில் மாத்திரம் 894 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் 4 மாவட்டங்களில் ஒரு ஆசிரியரையேனும் பயிற்றுவிக்காத ‘‘மிஸ்ஸக இ - நென பியச’’ நிலையங்களின் எண்ணிக்கை 60 ஆக இருந்தது.

**(ஆ) திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் 441 ‘‘மிஸ்ஸக இ - நென பிசய’’ நிலையங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், அவற்றில் 303 ஆய்வுகூடங்கள் மாத்திரம் திறந்துவைக்கப்பட்டிருந்தன.

(ii) 10 மிஸ்ஸக மாவட்ட தகவல் தொழில்நுட்ப வள நிலையங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், அவற்றுள் 03 நிலையங்கள் மாத்திரம் தாபிக்கப்படடிருந்தன.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற மிஸ்ஸக ‘‘இ’’ திறன்கள் கூடத்திற்கான கணனிகள் மற்றும் கணனி உப பாகங்களைக் கொள்வனவு செய்யும் செயற்பாடு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கேகாலை மாவட்டத்தின் தேசிய பாடசாலையொன்றிற்காக 20 காணிகள், 20 யூ.பீ.எஸ். இயந்திரங்கள், மல்டிமீடியா புரஜெக்டர் மற்றும் ஸ்கேனர் இயந்திரமொன்றினைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,273,845 தொகையும், கணனி ஆய்வுகூடத்தினை புனரமைப்பதற்காக ரூபா 830,000 தொகையுமாக ரூபா 3,103,845 கூட்டுத்தொகை கேகாலை மாவட்டச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலைக்கு கல்வி அமைச்சினால் மஹிந்த கணனி

வள நிலையமொன்று தாபிக்கப்பட்டிருக்கும் போது மிஸ்ஸக ‘‘இ’’ திறன்கள் கூடமொன்றினை தாபிப்பதற்காக அமைச்சினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பாடசாலையயொன்றிற்கு 10 கணனிகளை வழங்குதல் அமைச்சின் கொள்கையாக இருந்ததெனினும், அதற்கு முரணாக இந்தப் பாடசாலைக்காக 20 கணனிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.8 முறையற்றக் கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாகவிருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தரப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளை பின்பற்றாமை

100 ‘‘இ’’ திறன்கள் கூடங்களுக்காக 1,000 மடி கணனிகள், 1,000 யூ.பீ.எஸ். இயந்திரங்கள், 100 இன்ஜெக்ட் அச்சுப்பிரதி இயந்திரங்கள், 100 பிளட் பெட் ஸ்கேனர்கள், 100 திரையுடனான பல்லூடக ஒளி எறிவுக் கருவிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 132,384,173 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 6.1.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம் ஆகக்குறைந்தது கூறுவிலை கோரப்பட்ட திகதிக்கு முன்னைய திகதி வரையிலும் கூறுவிலை ஆவணங்களை பெற்றுக்கொள்ள கேள்விதாரர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டுமெனினும், இந்தக் கொள்வனவின் போது கூறுவிலை ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய கால எல்லை வரையறுக்கப்பட்டிருந்தது.

(ii) 6 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளுக்கு 3 தொகுதிகளின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2014 பெப்ரவரி 13 ஆந் திகதி கூறுவிலை கோரப்பட்டிருந்தது. இந்த 3 தொகுதிகளுக்காக ஆகக் குறைந்த விலைகள் ஒரே நிறுவனத்தால் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த விலையினை அடிப்படையாகக் கொள்ளாமல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு முதலாவது தொகுதி ஆகக்குறைந்த விலைக்கும் இரண்டாம் மற்றும் மூன்றாவது

தொகுதிகள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது விலைகளுக்கும் வழங்கப்பட்டிருந்தன. இதன் போது முன்னுரிமையை அடிப்படையாகக் கொள்ளாமல் ஆகக் குறைந்த விலையினைச் சமர்ப்பித்த நிறுவனமொன்றிற்கு மொத்தக் கொள்வனவினையும் வழங்கியிருந்தால் அரசுக்கு ரூபா 5,012,224 தொகையான நிதி ரீதியான நலனொன்றினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை காணப்பட்டது.

(iii) தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் இணைந்ததாக ''இ'' திறன்கள் கூடத்தினை திறந்து வைக்கும் தினங்களுக்கு முன்னுரிமை வழங்கி தாமதத்தை குறைக்கும் நோக்கில் மேற்கூறியவாறு வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் பொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) கணனி மற்றும் கணனி உபபாகங்கள் வழங்குதல் தொடர்பில் கேகாலை மாவட்டத்தின் நான்கு பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- வலையமைப்பிற்காக 03 பாடசாலைகளில் கேபள்கள் பொருத்தப்பட்டிருந்ததெனினும், இணைய வசதிகள் வழங்கப்பட்டிராத பாடசாலையொன்றில் கேபிள்களேனும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

- கேகாலை மாவட்டத்திற்காக இரண்டு கம்பனிகளால் கணனி மற்றும் கணனி உப பாகங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், வழங்கல் கம்பனியொன்றினால் கணனிகள் வழங்க வேண்டிய மாதிரியில் பாடசாலையொன்றுக்கு 04 கணனிகள் வீதமும் ஏனைய மாதிரியொன்றில் 06 கணனிகள் வீதமும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

- பாடசாலையொன்றிற்காக 2014 செம்தெம்பர் 04 ஆந் திகதி கையளிக்கப்பட்ட 10 கணனிகளில் 05 கணனிகள் ஒக்தோபர் 25 ஆந் திகதியிலிருந்து கணக்காய்வு திகதியான 2015 யூன் 19 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ‘‘இ’’ திறன்கள் கூடம் தாபிக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் அந்த ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்ற பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்கான குறித்துரைக்கப்பட்டதொரு அடிப்படையொன்று இல்லாதிருந்ததுடன், தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளும் அடிக்கடி மாற்றங்களுக்குட்பட்டிருந்தன.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் அம்பாறை, கேகாலை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய 6 மாவட்டங்களுக்காக 267 கணனி நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்ததெனினும், அவற்றுள் 100 நிலையங்கள் கேகாலை மாவட்டத்தின் பாடசாலைகளுக்கும், 115 நிலையங்கள் அம்பாறை மாவட்டத்திற்கும் உரியனவாகும். 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 92 கணனி நிலையங்களில் 70 நிலையங்கள் கேகாலை மாவட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வளங்களின் பங்கீடு அசாதாரண முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 137 நெனசல நிலையங்கள் உள்ளடங்கலாக 1,005 மொத்த நென சல நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்ததெனினும், இந்த நெனசல நிலையங்களுக்காக வழங்கப்பட்டிருந்த கணனி, கணனி உப பாகங்கள் உள்ளடங்கலாக ஏனைய உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் அமைச்சிடம் காணப்படவில்லை.

(ஈ) 1991 செப்தெம்பர் 01 ஆந் திகதி தொலைத் தொடர்புகள் திணைக்களத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை ரெலிகொம் நிறுவனத்திற்கு கையேற்கப்பட்டிருந்ததெனினும், தொழில்நுட்பவியல் திணைக்களத்தில் சேவையாற்றிய ஊழியர்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த பாராயமடையோதாருக்கான கணக்குகளில் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் ரூபா 78,027 பெறுமதியான 60 பாராயமடையோதாருக்கான கணக்குகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 08 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 02 | 28 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 21 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 16 | 04 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | **மொத்தம்** | **93** | **48** | **45** |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 45 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.